27 வயது வாலிபருடன் தகாத உறவுக்காக

இறைச்சி கடைக்காரரை கொன்ற 36 வயது மனைவி

காதலன், நண்பர்களுடன் கைது

▶ கைது செய்யப்பட்டவர்கள்.

பாலக்கோடு, ஏப்.12: பாலக்கோடு அருகே இறைச்சி கடைக்காரர் கொலை செய்யப்பட்ட வழக்கில் மனைவி, காதலன் உள்பட 4பேரை போலீசார் கைது செய்தனர்.

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் கொரவன் திண்ணை கிராமத்தைச் சேர்ந்தவர் குமார்(41). இவர், பாலக்கோடு அருகே எர்ரனஅள்ளி கிராமத்தில் வசித்து வந்தார். பாலக்கோடு அரசு போக்குவரத்துக் கழக பணிமனை அருகே கோழி இறைச்சிக்கடை மற்றும் பழைய இரும்பு கடை நடத்தி வந்தார். இவர் முதல் மனைவியை பிரிந்து பாலக்கோடு எர்ரனஅள்ளி பகுதியைச் சேர்ந்தகோவிந்தம்மாள்(36) என்பவரை 2வதாக திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 8 வயதில் மகள் இருக்கிறாள்.

கோவிந்தம்மாள், கணவருக்கு உதவியாக கோழிக்கடைக்கு சென்று வருவார். கடந்த சில வருடங்களாக கோவிந்தம்மாளுக்கும், தனியார் நிதி நிறுவன ஊழியரான நாகராஜிக்கும் (27) பழக்கம் ஏற்பட்டு நாளடைவில் தகாத உறவாகமாறியது. கணவர் வீட்டில் இல்லாத நேரத்தில் கோவிந்தம்மாள், நாகராஜ் உல்லாசமாக இருந்துள்ளனர். இதனை அறிந்த குமார் அவர்களை கண்டித்துள்ளார். மேலும், தகாத உறவை கைவிடுமாறு கூறியுள்ளார். ஆனால், அவர்கள் தொடர்ந்து பழகி வந்துள்ளனர். இதுதொடர்பாக கடந்த 10 நாட்களுக்கு முன்பு இருவருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது, குமார் ஆத்திரத்தில் கோவிந்தம்மாளை அடித்து துரத்தியுள்ளார். இதையடுத்து, அவர் பாலக்கோடு அண்ணாநகரில் உள்ள தனது அக்கா வீட்டில் தஞ்சமடைந்தார்.

இந்நிலையில், கடந்த 9ம் தேதி காலை குமார் கொலை செய்யப்பட்டார். இதுகுறித்து பாலக்கோடு போலீசார் தனிப்படை அமைத்து விசாரித்து வந்தனர். சந்தேகத்தின்பேரில், கோவிந்தம்மாளை பிடித்து விசாரணை நடத்தியதில், கள்ளக்காதலுக்கு குமார் இடையூறாக இருந்ததால், தீர்த்து கட்டியது தெரிய வந்தது.

கோவிந்தம்மாள் அளித்த வாக்குமூலம் குறித்து போலீசார் தெரிவித்ததாவது: தகாத உறவை குமார் கண்டித்ததால், அவரை கொலை செய்து விட்டு கோழிக்கடை, இரும்பு கடையை அபகரித்து உல்லாசமாக வாழலாம் என காதலன் நாகராஜ் உடன் சேர்ந்து கோவிந்தம்மாள் சதி திட்டம் தீட்டியுள்ளார். அதன்படி, கடந்த 8ம் தேதி இரவு 11 மணிக்கு காதலன் நாகராஜ் மற்றும் அவரது கூட்டாளிகளான சொன்னம்பட்டியைச் சேர்ந்த ஆனந்தகுமார் (27), சாமியார் கொட்டாய் தமிழரசன்(25) ஆகியோர், மது போதையில் சென்று, கடையில் தூங்கிக் கொண்டிருந்த குமாரை கை, கால்களை கயிற்றால் கட்டி போட்டு தலையணையை முகத்தில் வைத்து அமுக்கியுள்ளனர். அப்போதும் உயிர் போகாததால், கயிற்றால் கழுத்தை இறுக்கியுள்ளனர். இதில், அவர் துடிதுடித்து உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து தலைமறைவாக இருந்த நாகராஜ், ஆனந்தகுமார், தமிழரசன் ஆகியோரை பிடித்து விசாரித்ததில் குமாரை கொலை செய்ததை ஒப்புக்கொண்டனர். பின்னர் கோவிந்தம்மாள், நாகராஜ், ஆனந்தகுமார், தமிழரசன் உள்ளிட்ட 4பேரையும் போலீசார் நேற்று கைது செய்து, தர்மபுரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, சேலம் மத்திய சிறையில் அடைத்தனர். தகாத உறவுக்கு இடையூறாக இருந்த கணவனை காதலனுடன் சேர்ந்து மனைவி கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எண்: A-12025/5/2023-SA
இந்தியா அரசு
நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்
உணவு மற்றும் பொது விநியோக துறை

காலியிட சுற்றறிக்கை

உணவு மற்றும் பொது விநியோகத் துறையின் (DFPD), கீழ்நிலை அலுவலகமான தேசிய சர்க்கரை நிறுவனம், கான்பூரில் பின்வரும் பதவிகளை நிரப்புவதற்கு தகுதியான அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன: (i) பேராசிரியர் (வேளாண் வேதியியல்); மற்றும் (ii) உதவிப் பேராசிரியர் (இயற்பியல் வேதியியல்). ஊதியக் குழுவின் முறையே நிலை13– மற்றும் நிலை11–, இரண்டும் பொது மத்திய சேவை, குரூப் 'A' அரசிதழ் பதிவு பெற்ற, அமைச்சகம் அல்லாத பதவிகளுக்கான விண்ணபங்கள் வரவேற்கப்படுகின்றன. நியமன முறை: பதவி உயர்வுபணி மாறுதல் (ISTC). பதவியின் விவரங்கள், தகுதி நிபந்தனைகள் முதலானவற்றை துறையின் இணையதளத்தில் www.dfpd.nic.in காணலாம். தகுதியான அலுவலர்களின் விண்ணப்பங்கள் இந்த விளம்பரம் வெளியான தேதியிலிருந்து 45 நாட்களுக்குள் உதவிச் செயலாளர் (SA), DFPD (அறை எண். 476), கிரிஷி பவன், புது தில்லி – 110 001 என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். வேலையில்லாத மற்றும் தனியார் விண்ணப்பதாரர்கள் தகுதியற்றவர்கள்; எனவே, அவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

ஒம்/-
(அனில் குமார் குப்தா)
இந்திய அரசின் உதவிச் செயலாளர்
CBC 08201/11/0001/2526 தொ.பே.: 2338 0583

தெற்கு ரயில்வே

மின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: SA/OT/04/2025
நாள்: 08.04.2025

கோட்ட ரயில்வே மேலாளர், பணிகள், சேலம் அவர்கள், இந்திய குடியரசுத் தலைவர் சார்பாக, பின்வரும் பணிகளுக்கான மின் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

இனம் எண்	பணியின் பெயர்
01	சேலம் - கரூர் (SA-KRR) பிரிவில், சுரங்கவழி / ரயில்-அடிப்பாலம் (RUB) ஆகியவற்றில், தரநிலை RDSO வகை உயர அளவியை (Height Gauge) ஏற்படுத்துதல் - 23 எண்ணிக்கை. தொகை மதிப்பு (₹): **1,75,78,119;** முன்வைப்புத் தொகை (₹): **2,37,900;** நிறைவேற்றும் காலம் (மாதம்): **09**
02	ஜோலார்பேட்டை - சேலம் (JTJ-SA) பிரிவில், லெவல் கிராசிங் - 92, 93 & 104 ஆகியவற்றுக்குப் பதிலான சுரங்கவழிகளில், மேற்கூரை இடுதல் உட்பட, வடிகால் வசதிகளை மேம்பாடுகள் செய்தல். தொகை மதிப்பு (₹): **2,14,74,162;** முன்வைப்புத் தொகை (₹): **2,57,400;** நிறைவேற்றும் காலம் (மாதம்): **10**
03	சேலம் - கரூர் (SA-KRR) பிரிவில், சேலம் மற்றும் மல்லூர் நிலையங்கள் இடையே, 4/400-500 -ல், ரயில்-அடிப்பாலம் (RUB) எண்: 13 -ல், முன்னறிவித்தபடி தடுப்புச் சுவர், மேற்கூரை இடுதல் மற்றும் வடிகால் ஏற்பாடுகள். தொகை மதிப்பு (₹): **2,09,17,666;** முன்வைப்புத் தொகை (₹): **2,54,600;** நிறைவேற்றும் காலம் (மாதம்): **09**
04	ஓராண்டு காலத்திற்கு, ADEN/ATU துணைக் கோட்டத்தில் அமைந்துள்ள சுரங்கவழிகளில், நீரை அகற்றி, சகதியை நீக்கி, நீர்வரத்து இடங்களை சரியாக்குதல் (clearing water courses) மற்றும் புதர்கள் / குப்பைகள் முதலியவற்றை அகற்றுவதற்கான ஆண்டுப் பராமரிப்புப் பணிகள் - மொத்தம் (68 சுரங்க வழிகள்). தொகை மதிப்பு (₹): **1,32,74,779;** முன்வைப்புத் தொகை (₹): **2,16,400;** நிறைவேற்றும் காலம் (மாதம்): **12**
05	சேலம் கோட்டத்தில், Group D ஊழியர்களுக்காக, கருவி அறையுடன் கூடிய குழுவினர் ஓய்வு அறையை (Gang rest room) கட்டுமானம் செய்தல் / பழுதுபார்த்தல் (9 எண்ணிக்கை) (SSE/PW/N/SA - 2 எண்ணிக்கை மற்றும் SSE/PW/S/SA - 7 எண்ணிக்கை). தொகை மதிப்பு (₹): **1,90,96,606;** முன்வைப்புத் தொகை (₹): **2,45,500;** நிறைவேற்றும் காலம் (மாதம்): **10**
06	TFR (பிளைன் டிராக்) - 29.025 Tkm, TFR (P&C) - 63 எண்ணிக்கை, TWR - 21.804 Tkm & TBR - 2.26 Tkm (TWR மட்டும்). தொகை மதிப்பு (₹): **3,60,81,140;** முன்வைப்புத் தொகை (₹): **3,30,400;** நிறைவேற்றும் காலம் (மாதம்): **10**
07	(1) TRR(P) - 14.082 Tkm மற்றும் TSR(P) - 18.450 Tkm (TRR-P மட்டும்) (2) TFR (பிளைன் டிராக்) - 29.025 Tkm, TFR (P&C) - 63 எண்ணிக்கை, TWR - 21.804 Tkm மற்றும் TBR - 2.26 Tkm (TFR - பிளைன் டிராக் மற்றும் TFR P&C மட்டும்). தொகை மதிப்பு (₹): **2,24,34,914;** முன்வைப்புத் தொகை (₹): **2,62,200;** நிறைவேற்றும் காலம் (மாதம்): **11**
08	CTR (S) - 3.049 கிமீ மற்றும் TRR(S) - 9.682 Tkm. தொகை மதிப்பு (₹): **2,71,82,240;** முன்வைப்புத் தொகை (₹): **2,85,900;** நிறைவேற்றும் காலம் (மாதம்): **06**
09	ADEN / ED துணைக் கோட்டம்: SSE/W/ED பிரிவில், இரண்டு ஆண்டுகளுக்கு, தண்ணீர் வழங்கும் அமைப்பைப் பராமரித்தல். தொகை மதிப்பு (₹): **1,11,16,727;** முன்வைப்புத் தொகை (₹): **2,05,600;** நிறைவேற்றும் காலம் (மாதம்): **24**
	தேவைப்படும் தகுதிகள்
இனம் எண்கள்: 01 & 02	ஃபேப்ரிகேஷன் மற்றும் ஸ்டீல் கட்டமைப்புகளை நிறுவுதல் தொடர்பான ஏதாவது கட்டுமானப் பொறியியல் பணி
இனம் எண்: 03	டிராக் பணி தவிர, ஏதாவது கட்டுமானப் பொறியியல் பணி
இனம் எண்: 04	ஏதாவது கட்டுமானப் பொறியியல் பணி
இனம் எண்கள்: 05 & 09	டிராக் பணி / போக்குவரத்து தவிர்த்து ஏதாவது கட்டுமானப் பொறியியல் பணி
இனம் எண் : 06	போக்குவரத்துத் தடை அல்லது வேறுவிதமாக அல்லது நிலையான MFBW பிளான்ட் - ன் கீழ், MFBW பிளான்ட் ஆன்லைன் மூலம், 52kg / 60kg ரெயில்களை வெல்டிங் செய்தல்.
இனம் எண்கள் : 07 & 08	ஏதாவது டிராக் பணி

குறிப்பு: (i) ஒப்பந்தப்புள்ளி மூடுதல்: **30.04.2025** பிற்பகல் **14.00 மணிக்கு.** (ii) ஏதாவது மாற்றங்கள் செய்யப்பட்டு ஏதாவது திருத்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்து வருவது ஒப்பந்தப்புள்ளியர்களின் பொறுப்பாகும். முழுமையான விவரங்களுக்கு **www.ireps.gov.in** என்ற இணையதளத்தை கனிவும் அணுகலாம்.

கோட்ட ரயில்வே மேலாளர் / பணிகள் / சேலம்

திடீரென உள்வாங்கிய கடல்

▶ திருச்செந்தூர் முருகன் கோயில் அருகே நேற்று திடீரென கடல் சுமார் 60 அடி உள்வாங்கியதால் வெளியே தெரிந்த பாசி படர்ந்த பாறைகள்.

தமிழகத்தில் சமரசம்

புதுச்சேரி பாஜ மாநில தலைவர் நியமனத்தில் நீடிக்கும் சஸ்பென்ஸ்

புதுச்சேரி, ஏப். 12: தமிழகத்தில் பாஜ தலைவர் அண்ணாமலை மாற்றப்பட்டு, அவருக்கு பதிலாக நயினார் நாகேந்திரன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். மேலும் அதிமுகவுடனான பாஜ கூட்டணியும் அதிகாரப்பூர்வமாக இறுதி செய்யப்பட்டுள்ளது. ஆனால் புதுச்சேரியில் பாஜ தலைவர் யார்? என்பதில் தொடர்ந்து சஸ்பென்ஸ் நீடித்து வருகிறது.

புதுச்சேரியில் கடந்த ஜனவரி மாதம் அமைப்பு ரீதியிலான தேர்தலை சுமூகமாக நடத்தி முடிக்கும் வகையில், தேர்தல் பொறுப்பாளராக வானதி சீனிவாசன் எம்எல்ஏ நியமிக்கப்பட்டார். அனைத்து தரப்பு நிர்வாகிகளையும் தனித்தனியாக அழைத்து ஆலோசனை நடத்தினார். தொடர்ந்து அமைச்சர்கள், எம்எல்ஏக்களின் கருத்துகளை கேட்டறிந்தார். 30 சட்டமன்ற தொகுதிகளை கொண்ட புதுச்சேரியை 4 மண்டலங்களாக பிரித்து தேர்தல் நடத்தப்பட்டது.

மாநில தலைவர் பதவிக்கு பல்வேறு பெயர்கள் பாஜ தலைமையின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இருப்பினும் ஒரு அமைச்சர், நியமன எம்எல்ஏ பெயர் பரிசீலிக்கப்படுவதாக தகவல் வெளியானது. அதே நேரத்தில் ஒன்றிய பாஜ தலைவர்கள் புதுச்சேரியின் அரசியல் சூழலை பல்வேறு தரப்பில் இருந்து நெருக்கமாக கண்காணித்து வருகின்றனர்.

தமிழகத்தை ஒப்பிடும் போது புதுச்சேரியில் களநிலவரம் தற்போது வேறுமாதிரியாக இருக்கிறது. வரும் தேர்தலில் பாஜவின் முன் உள்ள சவால்கள் குறித்து அரசியல் சாரா நபர்களை வைத்து தரவுகளை சேகரித்து வருகிறது. மாநில தலைவர் தேர்தல் பாஜ தலைமை ஒரு சர்பிரைஸ் வைத்துள்ளதாக கட்சி மூத்த நிர்வாகிகள் கூறுகின்றனர். அதே நேரத்தில் பட்டியல் சமூகம் மற்றும் மீனவர்களை பிரதிநிதித்துவப்படுத்த திட்டமிட்டுள்ளது. தமிழகத்தில் தலைவர் தேர்வு சுமூகமாக நடந்து முடிந்துள்ள நிலையில், அடுத்தகட்டமாக பாஜ தலைமை புதுச்சேரியின் மீது தனது கவனத்தை திருப்பியுள்ளது. எனவே இன்னும் ஒரு சில தினங்களில் புதுச்சேரி பாஜ தலைவர் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், புதுவை மாநில துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் நேற்று மாலை திடீரென டெல்லிக்கு புறப்பட்டு சென்றுள்ளார்.

அண்ணா பல்கலை மாணவி பாலியல் வழக்கு

ஞானசேகரனின் தம்பி உள்பட 3 பேர் கைது

போலி நகை அடகு மோசடியில் சிக்கினர்

புதுச்சேரி, ஏப். 12: சென்னை அண்ணா பல்கலை மாணவி பாலியல் வழக்கில் தொடர்புடைய ஞானசேகரனின் தம்பி உள்பட 3 பேர், போலி நகை அடகு மோசடியில் கைது செய்யப்பட்டனர்.

புதுச்சேரி முதலியார்பேட்டை மற்றும் வில்லியனூரில் உள்ள அடகு கடையில் போலியான நகைகளை அடகு வைத்து ரூ.1.60 லட்சம் மோசடி செய்ததாக புகார் வந்துள்ளது. அதன்பேரில் முதலியார்பேட்டை போலீசார் விசாரணை மேற்கொண்டனர். அப்போது கடையில் கிடைத்த சிசிடிவி கேமரா காட்சிகளின் அடிப்படையில் மோசடியில் ஈடுபட்டது சென்னையை சேர்ந்த சுரேஷ்குமார் (33) என்பது தெரியவந்தது.

இதையடுத்து போலீசார் சுரேஷ்குமாரை கைது செய்து விசாரித்தனர். விசாரணையில் கொட்டிவாக்கத்தை சேர்ந்த பிரசாந்த் (எ) லால் (28) மற்றும் ஷேக் இஸ்மாயில் என்பது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அவர்கள் மூன்று பேரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி காலாப்பட்டு சிறையில் அடைத்தனர். அவர்களிடம் இருந்து ஒரு கார் மற்றும் ரூ.1.20 லட்சத்தை போலீசார் பறிமுதல் செய்தனர்.

இதனிடையே போலீசார் நடத்திய விசாரணையில் கைது செய்யப்பட்ட சுரேஷ்குமார், சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வழக்கில் கைது செய்யப்பட்ட ஞானசேகரனின் தம்பி என்பது தெரியவந்தது. இது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இறுதி ஊர்வலத்தில் வெடி விபத்து; வாலிபர் பலி

16 பேர் படுகாயம்

துறையூர், ஏப். 12: திருச்சி அருகே இறந்தவரின் இறுதி ஊர்வலத்தில் வெடி விபத்தில் சிக்கி வாலிபர் பலியானார்..

திருச்சி மாவட்டம் துறையூர் அடுத்த ஆலத்துடையான்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் அசோக்குமார். இவரது தாயார் ராஜமணி (80), வயது மூப்பு காரணமாக நேற்றுமுன்தினம் இறந்து விட்டார். நேற்று மாலை அவரது இறுதி ஊர்வலம் நடந்தது. இதில் ஏராளமானோர் மலர் தூவி பட்டாசு வெடித்தவாறு சென்றனர். தேர் திருவிழாவுக்கு பயன்படுத்தப்படும் பட்டாசு வெடித்ததாக கூறப்படுகிறது. இதில் பாதுகாப்பு இன்றி பெரிய வெடியை வெடித்த போது, அதில் இருந்து நாலா புறமும் தீப்பொறி பறந்து சிதறியது. இந்த தீப்பொறியில் சிக்கி அதே கிராமத்தை சேர்ந்த ஸ்ரீதர் (21), சேவகன் (68), சரவணன் (50), கார்த்திக் (25), தீனா (38) உள்ளிட்ட 17 பேர் பலத்த காயமடைந்தனர். அனைவரும் துறையூர் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு ஸ்ரீதர் (21) உயிரிழந்தார்.

இது குறித்து உப்பிலிபுரம் போலீசார் வழக்கு பதிந்து வெடி உரிய லைசென்ஸ் உள்ள கடையில் இருந்து வாங்கியதா? அல்லது நாட்டு வெடி வெடிக்கப்பட்டதா? என விசாரித்து வருகின்றனர்.

மேட்டூர் அணை நீர்மட்டம் 107.7 அடியானது

மேட்டூர், ஏப்.12: காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையை பொறுத்து, ஒகேனக்கல் மற்றும் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பதும், சரிவதுமாக உள்ளது. ஒகேனக்கல் காவிரியில் நேற்று முன்தினம் 1,200 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை விநாடிக்கு 1,000 கனஅடியாக சரிந்தது.

இதேபோல், மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் 922 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை விநாடிக்கு 436 கனஅடியாக குறைந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1,000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் 107.79 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று 107.73 அடியாக சரிந்துள்ளது. நீர்இருப்பு 75.22 டிஎம்சியாக உள்ளது.

நாகர்கோவில் அருகே தண்டவாள பணியில்

மண் சரிந்து விழுந்ததில் 3 தொழிலாளர் படுகாயம்

நாகர்கோவில், ஏப். 12: நாகர்கோவில்- திருவனந்தபுரம் இரட்டை ரயில் பாதை பணிகள் நடந்து வருகிறது. இதற்காக நாகர்கோவில் ஜங்ஷன் ரயில் நிலையமும் விரிவாக்கப்பட்டு வருகிறது.

நாகர்கோவில் ஜங்ஷன் ரயில் நிலையம் அருகே நெல்லை செல்லும் பாதையில் உள்ள குளத்தின் மேல் பகுதி வழியாக தண்டவாளம் செல்கிறது. பழைய தண்டவாளத்தின் கீழ் காங்கிரீட் குழாய் அமைக்கும் பணி நேற்று முன்தினம் நள்ளிரவில் நடந்தது. பொக்லைன் இயந்திரம் கொண்டு மண் தோண்டும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது திடீரென மண் சரிந்து, சென்னை பெரம்பூரை சேர்ந்த ஜானகி ரமேஷ்(47), பாளையங்கோட்டையை சேர்ந்த சிங்கம் மகாராஜன்(39), மேலூர் பகுதியை சேர்ந்த பாலமுருகன்(31) ஆகியோர் மீது விழுந்தது. மற்ற தொழிலாளர்கள் உடனடியாக அவர்களை மீட்டு ஆசாரிபள்ளம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். உடனடியாக மீட்கப்பட்டதால் மூவரும் உயிர் தப்பினர். மண் சரிந்ததால், காங்கிரீட் குழாய் அமைக்காமல், தோண்டப்பட்ட பள்ளம் மீண்டும் மூடப்பட்டது. தொடர்ந்து நேற்று காலை 6.30 மணிக்கு அந்த பாதையில் ரயில்கள் போக்குவரத்து தொடங்கியது. மண் சரிவால் கன்னியாகுமரி சூப்பர் பாஸ்ட் உள்ளிட்ட ரயில்கள் 4 மணி நேரத்துக்கு மேல் தாமதமாக வந்தன.

அமித்ஷாவின் சாணக்கியத்தனம் தமிழ்நாட்டில் எடுபடாது

அமைச்சர் ரகுபதி தாக்கு

புதுக்கோட்டை, ஏப்.12: சாணக்கியரை விட மிகப்பெரிய ராஜதந்திரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். அவருக்கு முன்பு அமித்ஷாவின் சாணக்கியத்தனம் தமிழ்நாட்டில் எடுபடாது என சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாநகராட்சி பொன்னம்பட்டியில் 'உங்கள் தொகுதியில் முதல்வர்' திட்டத்தின் கீழ் ஓட்டக்குளம் கண்மாய் பணியை நேற்று சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தொடங்கி வைத்தார். பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டி:

ஆளுநர் விவகாரத்தில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு இந்திய அரசியலில் அனைத்து மாநிலங்களுக்கும், ஜனநாயகத்திற்கு கிடைத்துள்ள மிகப்பெரிய வெற்றி. இந்திய அரசியல் வரலாற்றில், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு கிடைத்துள்ள மிகப்பெரிய வெற்றியை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்ட போராட்டம் மூலம் பெற்று தந்து நமக்கான உரிமையை நிலைநிறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் அமித்ஷாவின் டார்கெட்டை உடைத்து நொறுக்கி எறிவார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். சாணக்கியரைவிட மிகப்பெரிய ராஜதந்திரி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். அவருக்கு முன்பு அனைத்தும் அடிபட்டு போகும். அமித்ஷாவின் சாணக்கியத்தனம் தமிழ்நாட்டில் எடுபடாது.

பிரதமர் மோடி தமிழ்நாட்டிற்கு நிதி கொடுத்தோம் என்று கூறுகிறாரே. எங்களிடம் இருந்து எவ்வளவு நிதி பெற்றீர்கள். உங்களுடைய 10 ஆண்டு காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் நிதி நிலையில் எங்களுடைய வருவாய் எந்த அளவிற்கு பன்மடங்கு அதிகரித்து இருக்கிறது. அதற்கு தகுந்தாற்போல் நிதி கொடுத்திருக்கிறீர்களா. தமிழ்நாடு ஒட்டுமொத்தமாக புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை எங்களால் தெளிவாக சொல்ல முடியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

Muthoot Homefin

முத்தூட் ஹோம்ஃபின் (இந்தியா) லிட்.,
கார்ப்பரேட் அலுவலகம்: அலகு எண் 19–NE, 19ஆவது தளம், தி ரூபி, சேனாபதி பாபட் மார்க், ரூபரேல் கல்லூரி அருகில், தாதர் (மேற்கு), மும்பை, மகாராஷ்டிரா – 400 028.

சுவாதீன அறிவிப்பு (பிற்சேர்க்கை IV மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்க விதிகள் 2002-இன் விதி 8(1)-இன்படி)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் முத்தூட் ஹோம்ஃபின் (இந்தியா) லிட். (MHIL)–இன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)–இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3–இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் எனும் முறையில் வெளியிட்ட கோரிக்கை அறிவிப்பினைக் கீழே குறிப்பிட்டப்பட்டுள்ள கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள தொகையை அவ்வறிவிப்புக் கிடைத்த தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர் அத்தொகையினைச் செலுத்தத் தவறியபடியால் கடன்தாரர்களுக்கும் / உப கடன்தாரர்களுக்கும் / ஜாமீன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதனுடன் மேற்கூறிய விதிகளில் விதி 8–இன் கீழுள்ள தன் உரிமைகளைப் பயன்படுத்திக் கீழே குறிப்பிட்டுள்ள சொத்தை சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை **முத்தூட் ஹோம்ஃபின் (இந்தியா) லிட்.**–க்கு வட்டியுடன் சேர்த்துச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும். மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)–இன்படி கடனீட்டுச் சொத்துக்களை மீட்கக் கடன்தாரர் இதன் மூலம் அழைக்கப்படுகிறார்.

வ. எண்	கடன்தாரர்(கள்) / உப கடன்தாரர்(கள்) பெயர் / கடன் கணக்கு எண் / கிளை	கடனீட்டுச் சொத்துக்களின் சுருக்கமான விவரங்கள்	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் மொத்த நிலுவைத்தொகை (ரூ.)	சுவாதீன நாள்
1.	S T மணிவண்ணன் / T ஜீவா / CHE–HL–000472 / சென்னை	கிராம நத்தம் 114/1 பாகம், கதவு எண் 135/120, பள்ளித் தெரு, பெருமாள் கோயில் தெரு, திருவேற்காடு கிராமம், பூந்தமல்லி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், சென்னை– 600077, சர்வே எண்/ Hissa எண் கிராம நத்தம் 114/1 பாகம், நிலக்குறியீடு: 80 M SBM பள்ளி அருகில். எல்லைகள்: வடக்கு: விசுவாசம் நிலம் மற்றும் கட்டடம், தெற்கு: கூவம் ஆறு, கிழக்கு: 6 அடி வழி, மேற்கு: பெருமாள் நிலம் மற்றும் கட்டடம்.	20.01.2025 / ரூ.4,063,412/– (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து நானூற்று பன்னிரண்டு மட்டும்)	07 ஏப்ரல் 2025

தேதி: 12.04.2025
இடம்: திருவள்ளூர்
ஒம்/– அதிகாரப்பூர்வ அலுவலர்
முத்தூட் ஹோம்ஃபின் (இந்தியா) லிமிடெட்

பிற்சேர்க்கை IV–ஏ
அசையாச் சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

ஜாமீன் பெறுதல் மற்றும் நிதிச் சொத்துக்களை மறுகட்டமைப்புச் செய்தல் மற்றும் ஜாமீன் நலன் அமலாக்கச் சட்டம், 2002–ன் கீழாக அசையாச் சொத்துக்களை ஈ–ஏல விற்பனைஅறிவிப்பு மற்றும் ஜாமீன் நலன் (அமலாக்க) விதிமுறைகள், 2002–ன் விதி 8(6) மற்றும் விதி 9(1) அதன் விதிமுறைகளுடன் சேர்த்துப் படிக்கவும்.

கீழே விவரிக்கப்பட்டுள்ள ஜாமீன் பெற்ற கடன் நிறுவனத்திற்கு ஈடுவைக்கப்பட்ட / ஒப்படைக்கப்பட்ட அசையாச் சொத்தை (ஜாமீன் பெற்ற கடன் நிறுவனம்) **சம்மான் கேபிடல் லிமிடெட் (முன்னதாக இந்தியாபுல்ஸ் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிட் என்று அழைக்கப்பட்டது)–ன் (CIN : L65922DL2005PLC136029) (''செக்யூர்ட் கிரெடிட்டர்'')** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, **கையகப்படுத்தியுள்ளார்** கையகப்படுத்தியுள்ளார் என்பது இதன் மூலமாக பொது மக்களுக்கும் குறிப்பாக கடன் பெற்றவருக்கும்(கள்) ஜாமீன்தாரருக்கும்(கள்) இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இது **சுடலை முத்து எம் அலியாஸ் எம். சுடலை முத்து மற்றும் மணிமலை எஸ்** ஆகியோர் ஜாமீன் பெற்றகடன் வழங்குபவருக்கு செலுத்த வேண்டிய **08.04.2025**–லிருந்து கடன் ஒப்பந்தம் விதிமுறைகளின்படி, சட்ட செலவுகள் மற்றும் பிற கட்டணங்களுடன் **07.04.2025** தேதிவரை கடன்கணக்கு எண். **HHLCHE00440150**–ன் மீதாக **ரூ. 14,42,089/- (ரூபாய் பதினான்கு லட்சத்து நாற்பத்து இரண்டு ஆயிரத்து எண்பத்து ஒன்பது மட்டும்)** நிலுவை அசல், பாக்கிகள் (தாமதகட்டணம் உட்பட) மற்றும் வட்டியை வசூலிப்பதற்காக **30.04.2025**–ம் தேதி **மாலை 05.00 முதல் மாலை 06.00 வரை ''எங்கிருக்கிறதோ அங்கு'', ''உள்ளது உள்ளபடி'', மற்றும் ''எதுவாக இருந்தாலும்''** விற்பனை செய்யப்படும்.

அசையாச் சொத்துக்கான ஏல மதிப்பு **ரூ. 14,58,000/- (ரூபாய் பதினான்கு லட்சத்து ஐம்பத்தெட்டு ஆயிரம் மட்டும்)** ஆக இருக்கும் மற்றும் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை (''ஈஎம்டி'') ஏல மதிப்ப